


# தமிழ்ச்சிட்டு



**கனிந்து உதவுங்கள்!**

காய் பருத் தென்ன,
கனியாது வெம்புமேல்?
தாய், 'இருந் தாய்'எனச்
சொல்வது போதுமோ?
நீ'இருந் தாய்'என்று
உலகம் நினைக்கவே
ஏய நறும்பணி
என்றும் புரிகவே!



## தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

குரல்: 2. இசை: 2.

15 காசு




விரிகதிர் பரப்பி உலக முழுதாண்ட ஒரு தனித்திகிரி உரவோன் மலைவாயில் வீழ்ந்துவிட்டான். கதிரவனை விழுங்கிய காரிருளைத் துரத்திக்கொண்டே நீலவானில் பால்நிலவு தன் முழு அழகையும் காட்டியவண்ணம் எழுகிறது. தமிழ்போல் ஓங்கி உயர்ந்து விரிந்து பரந்து கிடக்கும் விண்ணில் தோன்றிய முழு நிலவைப் பருகியவண்ணம் நான் என் இல்லத்தில் வீற்றிருந்த பொழுது எனது அண்ணார் அவர்கள் தேன்போன்ற தமிழ்ச் சிட்டைக் காண்பித்தார். அதைப் படிக்கப் படிக்க என் மனம் தேன் பருகுவதுபோல் இருந்தது. வாழ்க உங்கள் தொண்டு! வளர்க தமிழ்த்தென்றல்.

ந. ஆ. உலகநாதன், நத்தம், வ. ஆ. மாவட்டம்.

சிறுவர் உள்ளமாகிய எங்கள் சர்க்கரைப் பந்தலில், அறிவாகிய தேன் மழையை நம் தமிழ்ச்சிட்டுப் பெய்து, புத்துணர்வும் புது மனமும் நல் அறிவும் படைத்தவர்களாக எங்கள் எல்லாரையும் விளங்கச் செய்கிறது. பன்னூறு காலம் செழித்துப் பலரையும் அங்ஙனம் அறிவாலும் தமிழாலும் உயர்த்தி அறியாமையை அகழ்ந்தெடுக்க இறைவனை இறைஞ்சுகிறேன்.

இராமநாதன். கோசனம்.

நான் இதுவரை வந்திருக்கும் உங்கள் இதழ்களைத் தவறாமல் படித்து வருகிறேன். இதில் வரும் புதிர்கள் யாவும் மூளைக்கு வேலை கொடுக்கின்றன. அடுத்துப் பெரியோர் கதையில் வரும் ஒவ்வொரு பெரியவரின் வாழ்க்கை வரலாற்றையும் படிக்கப் படிக்க அதன்படி நடக்க விரும்புகின்றது மனம். தாங்கள் வாழ் வாங்கு வாழ்ந்து தமிழ்ச்சிட்டைப் பெரிய அளவில் வரும்படி செய்யவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

ம. வே. இளவல், தொண்டு நிலையம், பங்களூர்–21, சீராமபுரம்.

தாய் மொழியாகிய தமிழுக்குத் தொண்டு புரிந்து வரும் பலருள்ளும், மாணவர் தம் அறியாமையைப் பாக்கி அருளொளி புகட்டும் ஆசிரியப் பெருந்தகை க. குப்புசாமி (பி. ஏ. பி. டி.) அவர்களின் மேன்மை பொருந்திய உள்ளத்தால் மாணவர்களாகிய நாங்கள் "தமிழ்ச் சிட்டு", "தென் மொழி" ஆகிய இவ்விரு சுடர்களையும் படிக்கும் வாய்ப்பினையும் சிலர் உறுப்பினர் ஆகும் வழியையும் அமைத்து உதவிய எங்கள் தமிழாசிரியர் அவர்களுக்கு எங்கள் உள்ளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

க. வேங்கடேசன், அ. சந்திரசேகரன், மு. காதர் நவாசு கான், கி. இராமசுப்பிரமணி. "பாரதி வித்யாலய பள்ளி", சுப்பிரமணிய நகர், சேலம் 5.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–2 | தி. பி. ௧௯௯௮ கன்னி (புரட்டாசி) செப்டம்பர் 67 | இசை–2


## நீ யார் ?

உன்னைப்பார்த்து யாரேனும் "தம்பி, நீ யார்?" என்று கேட்டால் என்ன சொல்வாய் தம்பி? நினைத்துப்பார். ஒரு நொடியில் விடை சொல்வாயா? அல்லது ஒரு முழ நீளம் கதை விரிப்பாயா? கெட்டிக்காரத் தம்பியாகவோ, தங்கையாகவோ நீ இருந்தால், உன் தந்தை, தாய் பேரைச் சொல்லி, "நான் அவர்களின் மகன்" என்று சொல்லுவாய். அல்லது "இன்னாரின் பெயரன்" என்று உன் பாட்டன் பெயரைச் சொல்லுவாய். ஆனால் அவ்வாறு நீ கூறினால் மட்டும் நீ உயர்ந்தவன் ஆக மாட்டாய். நீ சரியான கடமையைப் புரிந்தாய் என்று கருதப்படமாட்டாய். "பின் என்ன சொல்லவேண்டும்?" என்று கேட்கின்றாயா? சொல்கிறேன் கேள்:


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

முதலில் உன்னைப் பார்த்து, "தம்பி, நீ யார்?" என்று இன்னொருவர் கேட்கும்படி நாம் வாழக்கூடாது. உன்னைப் பார்த்தவுடனேயே உன்னை, உன் பெயரை, உன் செயல்களை அவர்கள் புரிந்துகொள்ளும்படி நீ நடந்து கொள்ளவேண்டும். தப்பித் தவறி, உன்னை அறிந்திராதவர்கள் உன்னைப்பார்த்து ஒருவேளை "நீ யார்" என்று கேட்டு விட்டால், உன் பெயரைக் கூறின அளவிலேயே அவர்கள் புரிந்து கொள்ளும்படி நீ நல்ல செயல்களைச் செய்து புகழ் பெற்றிருக்க வேண்டும். 'காந்தி' என்று சொன்னால் நாம் எல்லாரும் புரிந்து கொள்ளுகின்றோம் இல்லையா? எடிசன் என்று சொன்னாலே நமக்குத் தெரிகிறது இல்லையா? சாக்ரடீசு என்றாலே நமக்கு விளங்கிப் போகிறது இல்லையா? ஆபிரகாம் இலிங்கன் என்றாலே நீ புரிந்து கொள்ளுவாய் இல்லையா? வ. உ. சி; திரு. வி. க. இவர்களைப் பற்றி நீ ஏற்கனவே அறிந்திருக்கின்றாய் தானே? வள்ளுவர் பற்றிச் சொன்னால் எவருக்குத் தெரியாது. தம்பி, அவர்களைப் போல, பெயரைச் சொன்ன மட்டில் உன்னை எல்லாரும் புரிந்துகொள்ளும்படி, உன் பெயர் தனிப்பெயராகச் சிறந்து –புகழ்பெற்று விளங்கவேண்டும் என்று உறுதியாக நினைத்துக்கொள். உன் தந்தை பெயரோ, தாய் பெயரோ உன்னை அறிமுகப்படுத்தப் பயன்படக்கூடாது. இயேசுவின் பெயர்தானே நமக்குத் தெரியும். அவர் தந்தை பெயர் நமக்குத் தெரியுமா? அதுபோல் நம் பெயரைத் தெரிந்து கொண்டபின்தான் நம் தந்தை பெயரைத் தெரிந்துகொள்ளும்படி, நாம் நடக்க வேண்டும். அப்படி உன்னை உன் பெயராலேயே அறிமுகப்படுத்திக்கொள்ளும்படி உன்பெயர் பரவ வேண்டும்.

உன் பெயர் எப்படிப் பரவும்? நீ எல்லாருக்கும் தேவையானவனாக—எல்லாரும் விரும்புபவனாக–எல்லாரும் உன்னை எண்ணி மகிழும்படி உள்ளவனாக, நடந்துகொள்ள வேண்டும். இவ்வுலகம் நன்மை பெறும்படி எவன் தன் வாழ்வுக் காலத்தைச் செலவழிக்கின்றானோ—வாழ்ந்து காட்டுகின்றானோ, அவன் பெயரையே இவ்வுலகம் நினைவில் வைத்துக் கொள்ளும்; அவன் பெயரைச் சொல்லிச் சொல்லியே மகிழும்! புத்தன் பெயரை உலகமே சொல்லிக்கொண்டு வாழ்கின்றது.



# பெரியோர் கதை!

## கலிலியோ!

மு. மகிழரசன்.

தமிழ்ச் சிட்டுகளே!

உலகப் பெருமவியப்புகளுள் ஒன்ருக விளங்கும் 'சாய்ந்த கோபுரம்' உயர்ந்துநிற்பது பைசா என்னும் அழகிய நகரத்தில் என்பதை நீங்கள் அறிவீர்கள்! இந்த நகரம் இத்தாலி என்கின்ற நாட்டில் உள்ளது. இந்த நகரில்தான் அரிய பெரிய உண்மைகளை ஆராய்ந்து வெளிப் படுத்திய அறிவியல் பேரறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் கலிலியோ!

கலிலியோவின் பெற்ருேர் செல்வக் குடியினர். ஆகவே அவர் 1564ஆம் ஆண்டு, பிப்பிரவரி திங்களில் ஓர் ஏழையாகவே பிறந்தார்.

---

முன்பக்கத் தொடர்ச்சி)

அவர் பெயரைக் கேட்ட உடனேயே அவர் மக்களுக்காக அழுதது; அரசைத் துறந்தது; தொண்டு செய்தது எல்லாம் நம் மனக் கண்முன் வந்து நிற்கின்றன இல்லையா? அதுபோலவே நம் பெயரை நாம் சொன்னவுடனேயே மற்றவர் நம்மைப் புரிந்துகொள்ள வேண்டும். உன் பெயர் உன் வீட்டை விட்டிறங்கி, உன் ஊரைத் தாண்டி, உன் நாட்டைக் கடந்து உலகமெல்லாம் பயணம் செய்ய வேண்டும். ஒரு வன் தன் பெயரைப் பத்துக் கற்கள் தொலைவாவது பரவும்படி செய்யா மற்போனுல் அவன் இவ்வுலகத்தில் பிறந்தும் ஒன்றுதான்; பிறவாமல் இருந்தும் ஒன்றுதான். அவன் வாழ்வதைவிடச் செத்துப் போவதே மேல். அதனுல்தான் வள்ளுவர் "தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலில் தோன்ருமை நன்று" என்ருர். இப்பொழுது சொல்: "தம்பி! நீ யார்?" o

சின்ன அகவையிலேயே கலிலியோ அறிவுள்ள பிள்ளையாகவும், சிறந்த பண்புள்ளவராகவும், சீரிய நினைவாளராகவும் திகழ்ந்தார். தந்தையின் விருப்பப்படி இவர் மருத்துவக் கல்வி பயின்றார். இருந்தாலும் இவர் இசைக்கலை, எந்திரக்கலை, ஓவியக்கலைகளிலே ஆர்வம் காட்டினார். ஓவியக் கலையில் சிறந்து விளங்க வேண்டுமானால் கணிதத் தேர்ச்சி தேவையாகும் என்று ஓவியர் ஒருவர் கலிலியோவுக்கு அறிவுரை வழங்கினார். அதன்படி கணிதக் கலையைக் கற்று வல்லவர் ஆனார்.

கலிலியோ எதைப்பற்றியும் எப்பொழுதும் ஆழ்ந்து தீவிரமாக எண்ணிப் பார்க்கும் ஆற்றலும் பழக்கமும் உடையவராகத் திகழ்ந்தார். இவரின் அத்தகைய இடைவிடாத முயற்சிகளால் உலகுக்கே பெரும் நன்மைகள் விளைந்தன. புதிய உண்மைகள் தெரியவந்தன. அறிவியல் முன்னேற்றம் அடைய வழிகள் பிறந்தன. இவர் பலப் பல ஆராய்ச்சிகள் செய்தார். தோல்வியைக் கண்டு மனந்தளராமல் வெற்றி கிட்டும்வரை முயற்சி செய்தார். மாழைப் பொருள்களின் கலப்பைப் பிழையின்றி அளக்கும் துலாக்கோலைக் கண்டு பிடித்தார். 1583-ஆம் ஆண்டில் ஒருமுறை கிறித்துவக் கோயிலில் சமயச் சொற்பொழிவு நடந்தது. அதைக் கேட்டுக்கொண்டு இருந்த கலிலியோவின் கவனம் கோயில் உச்சியில் அசைந்து கொண்டிருந்த விளக்கின் மேல் நின்றது. அவர் அவ் விளக்கின் அசைவில் மனத்தைச் செலுத்தினார். ஓர் ஊசல் பொருளின் அசைகின்ற அசைவின் கால அளவு விரைவாக அசைந்தாலும், மெதுவாக அசைந்தாலும் — ஒன்றே என்ற உண்மையைக் கண்டு விளக்கினார். அதன் பயனாகத்தான் நாமும் இன்று மணிப் பொறிகளில் தண்டுசல் (Pendulum) இருப்பதைக் காண்கின்றோம். அடுத்து, கலிலியோ உயிர்த்துடிப்பைக் கணிக்கும் உயர்ந்த கருவியைக் கண்டு பிடித்தார். இது, நாடித்துடிப்பை நன்கு உணர மருத்துவர்களுக்கு மிக்க உதவி செய்யும் துணைவனாக விளங்கியது.

தம் அருந்திறல் ஆராய்ச்சியால் வெப்பத்தையும் அளக்கும் வெப்பமானி ஒன்றும் கண்டுபிடித்தார். வெப்பம் கூடினால் ஒரு பொருள் விரிவடைந்து நீளும்; குறைந்தால் சுருங்கும் என்ற உண்மையை

விளக்கினர். புகழில் வளர்ந்த இவர்க்கு 1588ஆம் ஆண்டில் பைசா நகரத்துப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் பதவியும் கிட்டியது.

முற்கால அறிஞர் அரிசுடாட்டலின் மூடக் கருத்துகளை இவரின் அறிவியல் உண்மைகள் தகர்த்தன. ஒருமுறை, கனம் மிகுந்த பொருளும், கனம் குறைந்த பொருளும் மேலிருந்து கீழ் பயணம் செய்ய ஒரே கால அளவே ஆகும் என்றார். இதை விளக்கி, மெய்ப்பிக்கத் தம் கையில் ஒரு பெரிய குண்டும் ஒரு சிறிய குண்டும் கொண்டு பைசா நகரத்துச் சாய்ந்த கோபுர உச்சியில் நின்று அவ்விரண்டு குண்டுகளையும் உருட்டி விட்டார். அவை ஒரே நேரத்தில் நிலத்தை அண்டி நின்றன.

இத்தகைய அரிய உண்மைகள் பலவற்றை அறிவித்தவர்மேல் அரிசுட்டாட்டிலின் அன்பர்கள் பகைமை பூண்டு நீங்கா இடர் விளைத்து நெஞ்சொடிக்கப் பார்த்தனர். ஆனால் கலிலியோ அஞ்சாதும் அசையாதும் ஆராய்ந்தபடியே இருந்தார். பகைவரின் கொடுமையால் இவர் தம் தாய் நாடு அகன்று பிளாரன்சு சென்றார். வறுமையில் வாடினர். பின்னர் பாதுவா என்ற நகரை அடைந்து ஓர் ஆசியராகத் தொழிலில் ஆங்கு அமர்ந்தார். ஆங்கும் தம் ஆய்வுப் பணியை அவர் நிறுத்தவே இல்லை. விண்மீன்களை விரிவாக ஆராய்ந்தார். ஒலி, ஒளி பற்றிய ஆய்வுகளும் செய்தார்.

ஒருமுறை சிறுவன் ஒருவன் தன் கையில் அகம் குவித்த கண்ணாடி வில்லையொன்றும் புறங்குவிந்த வில்லையொன்றும் பிடித்துத் தொலைவில் இருந்த கோயில் ஒன்றை உற்று நோக்கினன். அக்கண்ணாடி வில்லைகள் கோயிலை அணிமையில் காட்டின. இதனை அறிய வந்த கலிலியோ வியப்பெய்தி ஆய்வும் நடத்தினர். அதன் விளைவாகத் தொலைநோக்காடி ஒன்றைக் கண்டுபிடித்தார். அதைக்கொண்டு நிலவை ஆய்ந்தார். நிலவு மண்டிலத்தில் மலையும் உள்ளதென விளக்கிக் காட்டினர். வியாழனை ஆய்ந்தார்.

அறிவியல் அறிஞர் கலிலியோவின் புகழ் உலகம் முழுதும் பரவியது. எனவே உரோம் மக்கள் இவருக்கு வரவேற்பு அளித்துப் போற்றினர். இவருக்குப் புகழும் பெருமையும் வளர்ந்த அளவுக்குப் பகைமையும் இன்னல்களும் வளர்ந்தன; எதிர்ப்பும் தொடர்ந்தது.

தோலமி என்ற வானியல் அறிஞர், நிலம் ஓர் பாறையைப் போன்று நிலைத்த பொருளென்றும் வானம் அதன்மேல் கவிந்த குடையைப் போன்றதே என்றும் மக்களை நம்பவைத்து இருந்தார். இதனைக் கலிலியோ தம் அறிவால் மறுத்தார். உலகம் உருண்டை வடிவானது என்றும் அது பரிதியைச் சுற்றி வரும் கோளென்றும் பகர்ந்தார். இந்த உண்மைக் கருத்தால் அவர்க்குப் பகைமையும் தீங்குமே அண்டின.

சமயக் கருத்தை மறுத்தார் என்று குற்றஞ் சாட்டப் பெற்று முறை மன்றத்தில் நிறுத்தப்பட்டார். சிறை மன்றத்தில் அடைக்கப் பெற்றார்.

கலிலியோ தம் முதுமைக் காலத்தில் பகைவர்களால் மிகவும் துன்பம் எய்தினர். இருந்தாலும் ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று மனந் தளராமல் ஊக்கத்தோடு உழைத்தபடியே இருந்தார். இறுதியில் இவர் தம் கண்கள் பார்வை மங்கிக் கண்ணொளி இழந்த பின்னும் ஆராய்ச்சி செய்தார். தீரா நினைவிலேயே ஆழ்ந்தார். இவர் இறுதியாகக் கண்டறிந்த உண்மைகளைக் கொண்டுதான் இன்று நாம் பயன் படுத்தி வரும் பலவகை மணிப் பொறிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

பல அரிய பெரிய உண்மைகளைத் தெரியவைத்தும் பல புதுமைக் கருவிகளைக் கண்டு பிடித்தும் உலகுக்கு அறிவியல் ஒளி நல்கிய அறிஞர் கலிலியோ தம் எழுபத்து எட்டாம் அகவையில் 1642, சனவரி எட்டாம் நாள் புகழுடல் எய்தினர்.

சிறுவர்களே நீங்களும் நம் அறிஞர் கலிலியோவைப்போல் எந்தப் பொருளைப் பற்றியும் ஆர்வமுடன் ஆழ்ந்து எண்ணப் பழகுங்கள். அவரைப்போல் அறிவியல் உண்மைகளை உலகுக்கு அளியுங்கள். புகழை அள்ளிக் கொள்ளுங்கள். நம் தாய்மொழிக்கும் நாட்டிற்கும் அறிவியல் வளமும் புகழும் தேடிக்கொடுங்கள். o




# வானக்கப்பல் !

**துரை-மாணிக்கம்**

வானங் கிழிய இரைச்சல் போட்டு
வானக்கப்பல் பறக்குமாம் ! — அதில்
நானும் நீயும் ஏறிக் கொண்டால்
இலண்டனில் போய் இறக்குமாம் !

முகிலுக் குள்ளே பாய்ந்து விண்ணில்
முன்னும் பின்னும் சாயுமாம் ! — அது
பகலில் இரவில் வானக் கடலில்
பறந்து திரிந்தே ஓயுமாம் !

இறக்கைக் குள்ளே ஏறிக் கொண்டால்
எட்டுத் திக்கும் செல்லுமாம் ! — அது
பறக்கும் போதே குண்டைப் போட்டுப்
பலபேர் உயிரைக் கொல்லுமாம் !

காட்டைக் கடந்து, மலையைத் தாவிக்
கடலைத் தாண்டி ஓடுமாம் ! — அது
நாட்டைக் கண்டால் வந்து நிற்க
நல்ல இடத்தைத் தேடுமாம் !

பாட்டன் பாட்டி கண்ட தில்லை
பறவை போன்ற கப்பலாம் ! — குண்டு
போட்டால் தெரியும்; நானும் நீயும்
குழிக்குள் புகுந்தால் தப்பலாம்!

**இவ்வுலகம் (பூமி) கதிரவனைச் சுற்ற ஓராண்டு ஆனால், மற்ற கோள்கள் எத்தனைக் காலத்தில் கதிரவனைச் சுற்றுகின்றன.?**

| | ஆண்டு | நாள் | மணி | நிமையம் |
|---|---|---|---|---|
| அறிவன் ( புதன் ) | — | 91 | 14 | 12 |
| வெள்ளி | — | 226 | 7 | 12 |
| செவ்வாய் | 1 | 321 | 4 | 48 |
| வியாழன் | 11 | 313 | 21 | 36 |
| காரி ( சனி ) | 29 | 167 | 21 | 36 |
| உரேனசு | 84 | 7 | 7 | 12 |
| நெப்தியூன் | 164 | 284 | 6 | 48 |
| புளூட்டோ | 247 | 613 | 4 | 48 |

# உங்களுக்குத் தெரியுமா?

தொகுப்பு : மா. பூங்குன்றன்

O குயில் ஒரு மணி நேரத்தில் 100 கம்பளிப் புழுக்களைத்தேடித் தின்று விடுகின்றது.

O தாய் மரங்கொத்திக் குருவி ஒன்று 24 மணி நேரத்தில் 300 தடவைகள் தன் குஞ்சுகளுக்கு உணவு கொணர்ந்து ஊட்டி விடும்.

O நம் நாட்டில் மட்டும் ஏறத்தாழ 80 தேள் இனங்கள் உள்ளன என்று கணக்கிடப் பட்டுள்ளன.

O உலகில் ஏறத்தாழ 4000 பாலூட்டிகள் உள்ளன.

O ஆப்பிரிக்க யானைகளின் கடைவாய்ப் பற்கள் ஒவ்வொன்றும் 2.7½ விரற்கடை அகலமும், 10.3 விரற்கடை நீளமும் இருக்கும்.

O ஒரு மாட்டின் வயிறு 180 பதினம் (லிட்டர்) அல்லது 15 வாளித் தண்ணீர் கொள்ளும் அளவுடையது.

O திமிங்கில மீன் 30 சீரடி (மீட்டர்) நீளமும், 150 கல்லெடை (Ton) கனமும் உள்ளது. இது பாலூட்டி இனத்தில் மிகப் பெரிய உயிரி. எதிர்பாராத வகையில் இது கரைக்கு வந்து விட்டால், இதனால் மீண்டும் கடலுக்குள் போக முடியாது கரையிலேயே மடிய வேண்டியதுதான்.

# தெரிந்து கொள்ளுங்கள்

தொகுப்பு : இரா. வ. சனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

O வானொலியில் 21 மொழிகளில் செய்தி சொல்கின்றனர்.

O இவ்வுலகில் 35,00,00,00,000 பெயர்கள் உணவு, உடை, இடம் ஆகிய ஏந்து (வசதி)களுடன் வாழ வகை உள்ளதாம்.

O மாந்தனின் உடலில் ஒரு சிறு அறைக்கு அடிக்கத் தேவையான சுண்ணும்பும், மூன்று நான்கு முறை எரிக்கத்தேவையான வெளிமமும் (மக்னிசியம்), ஒரு பீப்பாய் நீரும், ஓர் ஆணி செய்யத் தேவையான இரும்பும், ஏழு நீளமான வழலை(சோப்பு)க்கட்டிகள் செய்யும் அளவுக்குக் கொழுப்பும், முப்பத்து ஆறுதீப்பெட்டிகள் செய்யப்போதுமான எரியமும் (பாசுபரசு), ஒன்றரை ஆழாக்கு உப்பும், ஐந்து சிறியபடி சருக்கரையும், குறைந்த அளவு கந்தகமும், நவச்சார(அமோனிய)மும் இருக்கின்றன.

O மேற்கு செருமனியில் 3½ கோடி உருபா செலவில் குப்பைக் கிடங்கு ஒன்று அமைத்துள்ளனர்.

O வருங்காலத்தில் மாந்தர்கள் நாளொன்றுக்கு 3 மணி நேரம் உறங்கினால் போதுமென அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

O அரைக்கால் குடுவை (காலன்) பாலில் 1 பைண்டுக்கு 4 கோடி நுண் உயிரிகள் இருக்கின்றன.

O திருவாட்டி சாக்குலின் கென்னடிக்கு வரும் மடல்களுக்கு விடை மடல்கள் விடுக்க வென்று, ஆண்டுக்கு 2,25,000 உருபா செலவிடுகிறது அமெரிக்க அரசு.

O "நடு அரசு" கொடுத்த 3000 கல்லெடை உணவில் 1000 கல்லெடை உணவை வேண்டா என்று கூறி விட்டது நாகாலாந்து. உணவுப் பற்றுக்குறை அங்குதான் இல்லை.

O தென் வியட் நாமுக்குள் வியட் நாம் போர் மறவர்கள் நுழை வதைத் தடுக்க, தென் வியட்நாம் எல்லையில் சுவர்களை அமெரிக்க அரசு 16,000,00,00,000 உருபா செலவில் கட்ட இருக்கிறது.

O 'ஐரோப்பா' வில் உள்ள 'வெசூவியசு' என்ற எரிமலையைக் காண ஆண்டு தோறும் 6,00,000 மக்கள் வருகின்றனர்.

O நம் பாராளுமன்றத்தின் மேல் அவையில் கீழ் விரிப்பு முதல், சுழற் காற்றுடி வரை எல்லாம் பச்சை வண்ணத்திலும், கீழ் அவையில் எல்லாம் சிவப்பு வண்ணத்திலும் உள்ளன.

O தூவலில்(பேனு) உள்ள முள்ளின் முனையில் 'ஆசுமியம்' 'இரிடியம்' என்ற இரண்டு மாழைகளும் கலந்த 'ஆசுமிஇரிடியம்' என்ற கலப்பு மாழை (உலோகம்) இருக்கிறது.

O வௌவாலுக்கு இரவில் கண் தெரியாது. அது நம்செவிகளுக்குக் கேட்காத மெல்லிய ஒலி ஒன்றைத்தான் வாயினுல் எழுப்பும். எதிரில் தடை இருந்தால் அவ்வொலியின் எதிரொலி கேட்கும். இவ்வெதிரொலியைக் கொண்டுதான் வௌவால் இரவில் எதிலும் மோதிக் கொள்ளாமல் செல்கிறது.

O ஆந்தையின் கண்கள் மாந்தனின் கண்களைவிடக் கூர்மையானவை. ஏறத்தாழ 1170 அடி தொலைவில் வைக்கப்பெறும் மெழுகுத் திரியின் ஒளியே அதன் பார்வைக்குப் போதுமானது.

O நீரில் வாழும் நீர்க்குதிரையின் கண்கள் இரண்டும் ஒரே நேரத்தில் முன்னும் பின்னும் பார்க்கும் ஆற்றல் உடையன. இக் குதிரையின் நீளம் 4 விரற்கிடை (அங்குலம்).

O மேற்கிந்தியா'வில் 'புரோச்சு'க்கு அருகில் 'நர்மதை' ஆற்றில் உள்ள ஒரு தீவில் இருக்கும் அரசமரம் ஒன்று 350 பெருங்கிளைகளையும், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகிளைகளையும் பெற்றுள்ளது.

O 'இந்தியா' வில் 2,80,00,000 குறுக்கத்தில பலவகையான பழங்கள் விளைவு செய்யப் படுகின்றன.

O 'எகிப்தில்' கட்டப்படும் 'ஆசுவான்' அணைக்கு 500,00,00,000 உருபா செலவாகும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

O 21 அகவை (வயது)க்கு மேல் மாந்தனின் உயர வளர்ச்சி நின்று விடுகிறது.

O ஒரு வீசங் கல்லெடை (பவுண்டு) நிறையுள்ள சிலந்திக்கூடு ஒன்றைச் செய்ய 27,600 சிலந்திகள் தேவை.

O அமெரிக்கர் தங்கள் குழந்தைகள் வளர்ப்புக் கென்று ஆண்டுக்கு 27 கோடி தாலர்களும், தாங்கள் வளர்க்கும் வீட்டு விலங்குகளுக் கென்று 50 கோடி தாலர்களும் செலவிடுகின்றனராம்.

O அமெரிக்க அரசு அமெரிக்கர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 18,000 உருபா செலவழிக்கிறது. இந்திய அரசு ஆளுக்கு 50 லிருந்து 150 உருபா வரைதான் செலவிடுகிறது.

# மாடும் புல்லும் எங்கே?

" ஒரு மாடு புல்லைத் தின்பதாக ஓர் ஓவியம் தீட்டியுள்ளேன் பார்" என்று தன் நண்பனிடம் ஒரு வெற்றுத்தாளை நீட்டினான் ஒருவன். நண்பன் அதைப் பார்த்து விட்டு" " எங்கே? புல்லைக் காணோம்" என்றான். அதற்கு ஓவியன் "புல்லை மாடு தின்றுவிட்டதே' என்றான். " மாடு எங்கே? என்றான் நண்பன். அதற்கு ஓவியன் "மாடு புல்லைத் தின்ற பிறகு இங்கே என்ன வேலை? போய்விட்டது' என்றான், நண்பன் 'கொல்' என்று சிரித்தவாறே சென்று விட்டான்.

விடுத்தவர்: சி. செங்கோட்டையன். அறி. இ; ஆ. ப.



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

எழுவாய் – செயப்படுபொருள் – பயனிலை அமைந்தது ஒரு தொடர்நிலை (வாக்கியம்)யாகும். பயனிலை இல்லாமல் தொடர் அமைவது தமிழ் வழக்கன்று.

எழுவாய்க்கு ஏற்பவே பயனிலை அமையும். "புகழேந்தி வந்தார்கள்" என்று எழுதலாமா? கூடாது. "புகழேந்தி வந்தான்" என்றே எழுத வேண்டும். எழுவாய் ஒருமையானால் பயனிலை (வினைமுற்று) ஒருமையாக இருக்கும். எழுவாய் பன்மையானால் பயனிலை பன்மையாக அமையும். "புலவர்கள் பிறமொழி கலவாமல் தமிழை வளர்த்தனர்' என்ற தொடர் பன்மை எழுவாய்க்கேற்ற 'வளர்த்தனர்' என்ற பன்மைப் பயனிலை கொண்டு வந்தது.

1. 'மறைமலையடிகள் தமிழுக்கு ஒப்பற்ற தொண்டு ஆற்றினார்'.
2. 'தேவநேயப் பாவாணர் மொழியாராய்ச்சி செய்கிறார்'.
3. 'பெரியார். ஈ. வே. இரா. பல ஆண்டுகள் தொண்டாற்றுவார்.,

இம்மூன்று தொடர்களையும் கவனித்தால், முதற்றொடர் இறந்த காலமும், இரண்டாந் தொடர் நிகழ் காலமும், மூன்றாந்தொடர் வருங் காலமும் குறிக்கும் வினைமுற்றுகளைப் – பயனிலைகளைப் பெற்றிருப்பதை அறியலாம்.

1. நான் பாடினேன்; 2. நீ எழுதினாய்; 3. அவர் பேசுவார்.

இம்மூன்று தொடர்களும், 1. தன்மைப் பயனிலையும், 2. முன்னிலைப் பயனிலையும், 3. படர்க்கைப் பயனிலையும் கொண்டமைந்தனவாம். தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களுக்கு ஏற்ற எழுவாய் – பயனிலை அமைத்தெழுத வேண்டும்.

1. அவ்வை வந்தாள், 2. திருவள்ளுவன் வந்தான். 3. அறிஞர்கள் வந்தார்கள். 4. மாடு வந்தது. 5. மாடுகள் வந்தன. பெண்பால், ஆண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்கள் தமிழில் உள. எழுவாய் எந்தப் பாலாக அமைகிறதோ, அதற்கேற்ற பால் குறிக்கும் வினை முற்றைப் பயனிலையாக அமைக்க வேண்டும். அவ்வை வந்தான்' என்று எழுதுதல் பிழை

யாகும். ஆடுகள் ஓடியது என்று எழுதாமல் 'ஆடுகள் ஓடின' என்றெழுதுக.

உயர்திணை, அஃறிணை (அல் + திணை) எனத் தமிழில் இருவகைத் திணைகள் உள்ளன.

'அழகன் பேசியது'. என்றெழுதலாமா? 'பேசியது' என்ற சொல் அஃறிணை சுட்டும் வினைமுற்று. 'அழகன்' என்ற எழுவாய் உயர்திணையாகும். 'அழகன் பேசினான்' என்று எழுதவேண்டும். 'கழுதை வந்தான்' என்றெழுதலாமா? 'கழுதை வந்தது' என்று அஃறிணைப் பயனிலையோடு எழுதுவதே முறையாம்.

திணை, பால், எண், இடம், காலம் என்ற ஐந்துக்கும் ஏற்ப எழுவாயும் பயனிலையும் பொருத்தமாக அமையுமாறு எழுதுவது நன்று.

3

தமிழில் ரகர லகர (ர, ல) எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வாரா. 'ராவணன்' என்ற 'சொல்லை, 'இராவணன்' என்று எழுதுக. 'லண்டன்' என்ற சொல்லை 'இலண்டன்' என்றெழுதுக. 'ருசியா' என்ற சொல்லை 'உருசியா' என்றும், 'லாங்பெல்லோ' என்பதை 'இலங்கு பெல்லோ' என்றும் எழுதுக

பிறமொழிச் சொல்லைத் தமிழிலக்கணத்திற்கு ஏற்பவும், தமிழ் ஒலி முறைக்கேற்பவும் மாற்றி எழுதுதல் வேண்டும். பிறமொழி ஒலிப்பை அப்படியே தம் மொழியில் ஏற்பது கூடாது. உலகில் வேறு எம்மொழியிலும் அவ்வாறு ஏற்பதில்லை. தமிழரும் பிறமொழிச் சொல்லைத் தமிழுக்கு ஏற்ற ஒலியிலும் வடிவிலுமே கொள்ளுதல் வேண்டும். சிலர் வடமொழி எழுத்துகளையும், ஆங்கில எழுத்துகளையும், கலந்தெழுதுவர். அன்னார் தமிழறிவு அற்றவராவர்; தமிழ் மரபு உணராதவர் ஆவர்.

தமிழில் டகாரமும் றகரமும் (ட, ற) சொல்லுக்கு முதலெழுத்தாக வராது. 'டில்லி' என்று எழுதக் கூடாது. 'தில்லி' என்றெழுதுக. 'ருக்பெல்லர்' என்றெழுதாமல் 'இராக்குப் பெல்லர்' என்றெழுதுக.

வல்லின மெய்யெழுத்துகள் (க், ச், ட், த், ப், ற்) ஆறும் சொல்லுக்குக் கடை எழுத்துகளாக (ஈறு) வருவதில்லை. பிறமொழிகளில்

அவ்வாறு வரும். அத்தகு பிறமொழிச் சொல்லைத் தமிழில் எழுத நேர்ந்தால், தமிழ் முறைப்படியே எழுதவேண்டும். 'குக்' என்ற சொல்லைக் 'குக்கு' என்றும், 'பெர்ள். எசு. பக்' என்ற சொல்லை. பெரல். எசு. பக்கு அம்மையார்' என்றும் எழுதுக. 'ப்ளூடார்ச்' என்று எழுதலாகாது; புளூடார்ச்சு என்றெழுதுக. 'வேட்சுவொர்த்' என்ற சொல்லை, 'வேட்சு வொர்த்து' என்று எழுதுக. 'வால்டர் இசுகாட்'என்பதை 'வால்டர் இசுகாட்டு' என்று எழுதுக.'வெர்சினியா உல்ப்' என்றெழுதாமல், 'வெர்சினியா வுல்ப்பு' என்றெழுதுக.

வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் 'கள்' என்ற விகுதி சேரும் போது வல்லெழுத்து மிகாது. 'கொக்கு' 'பாக்கு' 'கருத்து' எனும் சொற்கள் வன்றொடர்க்குற்றியலுகரச் சொற்களாகும். இவற்றோடு 'கள்' விகுதியைச் சேர்ப்பதானால், 'கொக்குகள், பாக்குகள், கருத்துகள்' என எழுதவேண்டும். 'கொக்குக்கள்' என்றெழுதுவது பிழை. பேச்சுகள், எழுத்துகள், காட்டுகள், வாத்துகள், கொப்புகள், குறிப்புகள், மறுப்புகள் என எழுதுவதே சரியாகும்.

நாள் + கள் = நாள்கள் என்றே அமையும், நாட்கள், வாட்கள் தோட்கள் என எழுதுவது தவறாம். நாள்கள், வாள்கள், தோள்கள் என எழுதுக.

'வேண்டாம்' என்றெழுதாமல், 'வேண்டா' என்றெழுதுக. அறத்தாறு இது வென வேண்டா, என்ற குறள் காண்க.

அஃறிணை ஒருமைச் சொல் 'அன்று' என்பது. 'மாடு அன்று' என்றெழுதுவது முறை. 'மாடுகள் அன்று' என்றெழுதக் கூடாது.

அஃறிணைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று 'அல்ல' என்ற சொல்லாகும். 'மாடுகள் அல்ல" என்று எழுதுதல் வேண்டும்.

சின்னம் = சிறுமை, சின்னம் + காஞ்சி = சின்னக்காஞ்சி, சின்னப் பெண்,சின்னப்பையன் என எழுதுக.'சின்ன காஞ்சி' என்றெழுதுதல் பிழையாம்.

(தொடரும்)

# என்று? என்ன கிழமை ?

பழனியாண்டி - புகழூர்

ஏதாவது ஒரு பக்கலை ( தேதியை )க் கொடுத்து அந்தப் பக்கலில் என்ன கிழமை என்று கேட்டால் உங்களால் சொல்ல முடியுமா?

அதற்கு ஒரு வழி நான்சொல்லுகின்றேன்.-

முதலில் மாத எண்கள் என்று நிலையான எண்களை (Constant) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அவை 12 ஆங்கில மாதங்களுக்கும் முறையே,

1, 4, 4, 0, 2, 6, 0, 3, 6, 1, 4, 6. என்பவையாகும்,

இவற்றைத் தெரிந்து கொண்ட பின் கீழ் உள்ள கணக்கைப் பார்ப்போம்.

எடுத்துக் காட்டாக :-

26--6--1935 -ஆம் பக்கலன்று என்ன கிழமை?

| | |
|---|---|
| முதலில் பக்கல் எண்ணைப் போடவும் : | 26 |
| பின் ஆண்டு எண்ணைப் போடுக : ( நூற்றாண்டு எண் 19-ஐ விட்டு விடுக ) | 35 |
| ஆண்டு எண்ணை நான்கால் வகுத்து ஈவை மட்டும் போடுக (மீதியை விட்டு விடுக) | 8 |
| பின் நிலையான மாத எண்ணைப் போடுக 6 வது மாத எண் = 6 | 6 |
| இவற்றின் மொத்தம் : | 75 |
| மொத்தத்தை 7-ஆல் வகுக்க வரும் ஈவு | 10 |
| மீதி | 5 |

மீதி 5-ஆகையால், ஞாயிற்றுக் கிழமையிலிருந்து 5 ஆம் கிழமை வியாழக்கிழமை எனக் கண்டு கொள்க.மீதி 0ஆனால் அது காரி(சனி)க் கிழமையாகும்




சென்ற மாதப் புதிரின் விடை :

பிள்ளைகள் முதலிருவருக்கு : ஒவ்வொருவருக்கும் $\frac{1}{4}$ பதினம் கறக்கக் கூடிய மாடுகளில் ஐந்தும், $\frac{3}{4}$ பதினம் கறவை மாட்டில் ஒன்றும் 2 பதினம் கறவை மாடுகளில் நான்கும் தந்தார்.

மூன்றும் பிள்ளைக்கு மிஞ்சிய 2 பதினம் கறவை மாடுகளில் இரண்டும், $^3/_4$ பதினம் கறவை மாடுகள் எட்டையும் தந்து விட்டார்.

**சென்ற மாதப் புதிரை எழுதிய கோ. இராசாராமுக்குத் தமிழ்ச் சிட்டு ஓராண்டுக்கு விடுக்கப் பெறும்.**

**இம்மாதப் புதிர் :**

இரண்டு மாணவர்கள் 20 கற்கள் இடைவெளி உள்ள எதிரெதிர் திசைகளில் உள்ள இரண்டு இடங்களில் இருந்து, இரண்டு மிதிவண்டிகளில் வருகின்றனர். ஒரு மிதி வண்டியின் கைப்பிடியில் அமர்ந்திருந்த ஓர் ஈ அவர்கள் புறப்பட்ட அதே நிமையத்தில் எதிரில் மிதி வண்டியில் வந்து கொண்டிருக்கும் மாணவனை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. அவனை அந்த ஈ அடைந்தவுடன், மறுபடியும் திரும்பி வந்த திசை நோக்கிப் பறந்தது. இப்படியே இரண்டு மிதி வண்டிகளும் சந்திக்கும் வரை, அந்த ஈ இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாகப் பறந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு மிதி வண்டியும் மணிக்கு 10 கற்கள் விரைவில் சென்று, ஈயும் மணிக்கு 15 கற்கள் விரைவில் பறந்திருந்தால் ஈ பறந்த மொத்த தொலைவு எத்தனைக் கற்கள் ?

— இப்புதிரை எழுதியவர்:

**தங்க. சங்கரபாண்டியன். தணிகை நிலையம்**
**159 காந்திசாலை. சுவால் பேட்டை,**
**அரக்கோணம் ( வ. ஆ.)**

விடை அடுத்த இதழில்.




O தமிழ்த் திரு. இளங்கோவடிகள் முதல், தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஈராகப் பெண் குலத்தின் மாண்பினைக் கண்ணகியின் வாயிலாகவும், பெண்ணின் பெருமை வாயிலாகவும் விளக்கினர். இக்காலப் பெண்கள் மேலை நாட்டு நடைமுறைகளைக் கையாண்டு, தமிழ்க்குலத்தின் தாய்மையினின்றும் பெண்மையினின்றும் மாறிச் செல்கின்றனர். இந் நடைமுறைகளினின்று தமிழ்த் தாய்மார்களின் தோன்றல்களாய் விளங்கத் தாங்கள் வெளியிடும் தென்மொழியிலும், தமிழ்ச் சிட்டிலும் பண்டையப் பெண்களின் வாழ்க்கை முறைகளை விளக்கி வெளியிடின் என் போன்ற மாண விகளின் வாழ்க்கை பிற்காலத்தில் மாட்சிமையோடு விளங்கும். விளங்க வைக்கவேண்டும். இதற்குத் தங்களிதழ் முனைய வேண்டுகின்றேன்.

மாணவி ச. மு. விசயாள், சந்தைமேட்டுத் தெரு, சங்கராபுரம்.

O தம்பி தங்கைகளே! முன்னைய தமிழ்ச் சிட்டுகளில் திருவாளர்கள் 'ஏதோ' 'சும்மா' இருவர்களைப்பற்றியும், திருவாட்டிகள் 'மினுக்கி' 'அரட்டை' இவர்களைப்பற்றியும் படித்தோம். இவர்களைப்போல் இல்லாமல் நல்ல ஒழுக்கமுடையவர்களாக இருந்து கொண்டு, தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கும் சிறந்த தொண்டு செய்வோம்! ந. ஆ. கிருட்டிணன், நத்தம், திருப்பத்தூர்.

O பிற்காலத் தமிழின் முன்னேற்றமும் தமிழரின் முன்னேற்றமும் இக்கால மாணவர்கள் – சிறுவர்களிடமே உள்ளன. ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' என்னும் முதுமொழிக்கேற்ப மாணவர்கள் சிறு அகவையிலிருந்தே மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் உள்ளவராய்த் திகழ வேண்டும். அவர்களுக்கு இளமையில் உண்டாகுமெண்ணமே அவர்கள் இறக்கும் வரையிருக்கும். எனவே இக்கால இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் ஊட்டி அவர்களை நல்ல குடிமக்களாகவும், நல்லதலைவர்களாகவும், ஆக்க வல்லது ''தென்மொழி'' ''தமிழ்ச்சிட்டு'' ஆகிய இரண்டு இதழ்களேயாகும். எனவே இவற்றை அனைவரும் தவறாமல் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதே என் விருப்பமாகும்.

சௌந்திரராசன், விரியூர். (தெ. ஆ.)

O வணக்கம் பல. ஆண்டு மலரில் தாங்கள் வெளியிட்ட ''மூட ஆமை'' என்ற கதைப் பாட்டு என்னை கவர்ந்தது. இனி ஒவ்வொரு தமிழ்ச்சிட்டிலும் கதை பொதிபாட்டு வெளியிடுங்கள். இஃது என்போன்ற மாணவர்களுக்குப் பாட்டுப் பயிற்சியையும் கொடுக்கும். மொழிப்பயிற்சியையும் கொடுக்கும். வெளியிடுவீர்களாக. அ. பழனி வேலன், கண்டமாத்தான், முதுகுன்றம்.

# பயன் மொழிகள்!

- இவ்வுலகில் உள்ள எல்லா ஊர்களும் நம்முடைய ஊர்களே! அவ்வவ்வூர்களில் உள்ள எல்லா மக்களும் நம்முடைய உறவினர்களே. தீமைகளும், நன்மைகளும் பிறரால் வருவன அல்ல; நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்வன ஆகும்.

- நமக்கும் பிறரைப்போல், கை முதலிய எல்லா உறுப்புகளும் சரிவர அமைந்திருக்கையில், அவற்றைக் கொண்டு நாம் எவ்வகையிலும் முயற்சி செய்யாமல், நாம் இன்னொருவரிடம் போய், 'எனக்கு ஒன்று ஈயுங்கள்' என்று கேட்பது இழிந்தது. அந்த இழிவையும் கருதாது, அப்படி ஒருவர் நம்மிடமே வந்து கேட்கையில் நாம் ஈயாதிருப்பது அதைவிட இழிந்தது.

- ஒருவருக்குத் தேவைப்படுகின்ற ஒரு பொருளை, அவர் தம் இயலாமையால் பெற முடியாமல் வருந்தும்பொழுது, நாமே அவரிடம் வலியச் சென்று, ''இந்தாருங்கள்; பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று அதனைக் கொடுப்பதே உயர்ந்தது. ஆனால் அவ்வாறு நமக்கே தேவையானபொழுது பிறர் வந்து ஒரு பொருளைக் கொடுப்பார்களானால். நாம் அதை நம் முயற்சியாலேயே பெற்றுக்கொள்வதே நலம் என்று கருதி, அதனை நன்றியுடன் 'வேண்டா' எனக் கூறிப் பெற்றுக்கொள்ளாதிருப்பதே மிகவும் உயர்ந்தது.

- ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளே என்றாலும், அவரவர் தரம் காரணமாக, அன்னையும் தன் அன்பில் வேறுபடுவாள். ஒரே குடும்பத்துள் பிறந்தவர்கள் ஆயினும், அவர்களுள் மூத்தவனையே பார்த்து 'வாருங்கள்' என்று அழைக்காமல், கற்றவனைப் பார்த்தே 'வாருங்கள்' என்று மக்கள் அழைப்பர். தாழ்ந்த குடியில் பிறந்தவனாயினும் கற்றவனானால், உயர்ந்த குடியில் பிறந்தவனும் அவனுக்குக் கீழிருந்து வேலை செய்வான். எனவே, அறிஞர்க்கு உதவியாக இருந்தும், பல பொருள்களை அவர்களிடம் கொடையாகக் கொடுத்தும் எல்லாரும் கல்வி கற்றுக் கொள்ளுவதே சிறப்பு உடையது.

- சாகா மருந்து கிடைப்பதெனினும் தாமே தனியாக உண்ணாதவரும், பகைகொள்ளும் சினமில்லாதவரும், பிறர் அஞ்சுவனவற்றிற்குத் தாமும் அஞ்சுபவரும், புகழ் என்றால் உயிரையும் கொடுக்கத் துணிந்தவரும், பழி என்றால் உலகம் முழுவதும் தருவதாயினும் பெற விரும்பாதவரும், அயர்வில்லாமல் தமக்காக இன்றிப் பிறருக்காக வாழ்நாள் முழுவதும் உழைக்கும் உயர்ந்தோரும் இருப்பதாலேயே இவ்வுலகம் இன்றும் நிலைபெற்று இருக்கின்றது.

(புறநானூற்றுக் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.